184438

இந்து குடும்ப
பாலிகா பூஷணம்

Y15:31427
N28
184438

515

உ

கடவுள் துணை.

மல்லிகார்ச்சுனபுரம்

மாணிக்கவல்லியம்மாளியற்றிய

# இந்துகுடும்ப
# பாலிகாபூஷணம்.



16 APR

...ரை புதுமண்டபம் புஸ்தகஷாப்
...பால் நாயுடு அவர்களால்
...திருவொற்றியூர்
...ச அச்சுக்கூடத்திற்
...ப்பெற்றது.
1923

415:3427
N28
184438

உ

கணபதி துணை

மல்லிகார்ச்சுனபுரம்

மாணிக்கவல்லியம்மாளியற்றிய

# இந்துகும்ப
# பாலிகாபூஷணம்



சென்னை திருவொற்றியூர்

நாகை. சரவண முதலியார் அவர்களது

கலைமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

1928

184438

உ

வேலும்

# இந்துகுடும்ப

# பாலிகாபூஷணம்.

விநாயகர் துதி

கன்மம்போம் வல்வினைபோம் காசினியே யடுக்கும்
துன்பம்போம் போகாத்துயரம்போம் அம்மையுடன்
தில்லையுடனம்புலியும் மீதவன் மகிழ்ந்தளித்த
வல்லையானைத் தொழுப வர்க்கு

சரஸ்வதி துதி

பொன்னேகலைபயின் பூங்குயிலேபுவிமூன்றிலுந்த
மன்னேயெனதுயிர்க்கோர் துணையேயருங்கல்வியுட
னின்னேயமுறப்பொருளைத் தருதனைவின்மணியே
வன்னேருயர்வருவெண்டாமரையிற்சரஸ்வதியே.

இப்படி பாலிகைகள் பிள்ளையாரையும் சரஸ்வதிதே வியையும் கும்பிட்டுக்கொண்டு பாடசாலைக்குப்போனால் பாடங்களைச் செவ்வையாய் உபாத்தியாயரிடத்திற்படி த்து அடிபடாமல் இருப்பார்கள்.

தொடைதட்டி விளையாடல்-

ஒருபுட்டம் இருபுட்டம் ஓடுவாமல்களம் பருப்பா ஞ்சோறும் பன்னிரண்டு வகையாம் செக்கைத்திருப்பி செவ்வெண்ணெய்வார்த்து மாடுகன்று வரும்போது மஞ்சாத்தண்ணீர் குளிக்கும்போது காலைமடக்கடிகாமா ட்டி.

மார்பில்தட்டிக்கொண்டு ஓடிவிளையாடல்.

முன்னேபோனபீறைட் சிச்சின்னவீட்டிற்கு விளக்கே ற்றிவையா கையில் குழந்தையிருக்கின்றது.

குழந்தையை கீழேவிட்டுவிட்டு நகைகளைமுடி த்துவிட்டு வாயில் பச்சரிசி போட்டுக்கொண்டு மார்பில் தட்டிக்கொண்டுவா.



என்னகுளத்தில்முழுகினை பீக்குளத்தில்முழுகினேன் எங்கள்வீடெல்லாம் பீயாய்விட்டது ஓடுஓடு.

பாலிகைகள் உல்லாசவழி நடைவார்த்தைகள்.

நீஎங்கேபோனாய்' ஊருக்குப்போனேன், என்னஊர் மைலாப்பூர், என்னமையில் காட்டுமயில், என்னகாடு ஆறுகாடு, என்னஆறு பாலாறு, என்னபால் கள்ளிப் பால், என்னகள்ளி இலைக்கள்ளி, என்னயிலை வாழையிலை என்னவாழை கற்பூரவாழை, என்னகற்பூரம் ரசகற்பூரம் என்னரசம் மிளகுரசம், என்னமிளகு வால்மிளகு, என்னவால் நாய்வால், என்னநாய் மரநாய், என்னமரம் பலாமரம், என்னபலா, வேர்பலா, என்னவேர், வெட்டிவேர், என்னவெட்டு பனைவெட்டு என்னபனை தாளிபனை என்னதாளி விருந்தாளி, என்னவிருந்து, மணவிருந்து, என்னமணம் பூமணம் என்னபூ மாம்பூ என்னமா அம்மா

கண்களை மூடியாடும் பாடல்,

உங்களம்மாள் என்னென்னபோட்டாள் பாலுஞ்சோறுபோட்டாள் ஈ விழுந்ததா எறும்பு விழுந்ததா எறும்பு விழுந்தது எடுத்துவிட்டுக்குடித்தையா சும்மா குடித்தையா சும்மாகுடித்தேன் உனக்கொருகாயும் எனக்கொரு பழமும் தேடிக்கொண்டுவா.

காயேவா பழமேவா காஞ்சிபுரத்து நெல்லேவா.

நான்குமூலைகளிலும் நின்று சுற்றி விளையாடல்-

காயே கடப்பங்காய் காஞ்சிபுரத்து நெல்லிக்காயுதி ர்ப்பே வார்காய் வாரப்போட்ட நெல்லிக்காய்.

கட்டியனையை வாங்கும் பாடல்.

இவ்வளவுவேணுமோ பாவற்காய் அதுவும்வேண்டாம் பீர்க்கங்காய், இவ்வளவுவேணுமோ பீர்க்கங்காய் அதுவும் வேண்டாம் கத்திரிக்காய், இவ்வளவு வேண்டும

சுத்திரிக்காய் அதுவும்வேண்டாம் வாழக்காய், இவ்வளவு வேண்டுமா வாழக்காம் அதுவும் வேண்டாம் முருங்கக்காய்.

### ஏழாங்காயாடும்பாடல்.

1-காய், ஆலைப்பொருக்கி ஆசாரக்கள்ளி தூக்கந்தெளிந்த தூவாடைக்காரி பாக்குமரத்துக்கு பாவாடைக்காரி.

2-காய் வீறியிரண்டெடுக்க விசன்தண்டெடுக்கமாதா மண்ணெடுக்க.

3-காய், முக்கோட்டுராவணன் மூத்துச்சரவணன்

4-காய், நான்குநடந்துவர நாகேந்திரன் தொடர்ந்துவர

5-காய், ஐயர்அரைக்கும்மஞ்சள் தேவர்குளிக்குந்தண்ணீர்

6-காய், ஆக்கோரடி வாழை அண்ணன் தம்பி பெருவாழை.

7-காய், ஏழண்ணன்காட்டிலே எங்களண்ணன்வீட்டிலேமஞ்சள்சாட்டிலே.

பொதை பொம்பரம் செட்டிசிதம்பரம் கொக்குகேளாட்டும்.

### மழைவாவழைக்கும்பாடல்.

கோட்டைப்பாக்கு நறுக்கித்தாரேன் கோயில்மண்ணை தெள்ளித்தாரேன் ஜோர்மழைவா ஜோர்மழைவா ஜோர் மழைவா

### [illegible]

மஜிலின் [illegible] கட்டிக்கொண்டு மத்தாப்புரவிக்கை போட்டு [illegible] ண்டியிலேறிக் கொண்டு கன்செட்டுவா[illegible] வைத்துக்கொண்டு வாங்களம்மா சம்மந்தி போக[illegible]



### சோளமடிக்கும்கொம்மி.

சோளச் சோளக் காட்டிலே சோளமடிக்கிற வீட்டிலே, பந்தடியேயம்மாளே பதக்குச்சோளம் நான் தாரேன், சின்னச்சின்னமூக்குத்தி சின்னப்பனிட்ட மூக்குத்தி, அத்தைபிட்டமூக்குத்தி அரப்பணைத்தமூக்குத்தி

### புஷ்பச்செண்டு விளையாடல்.

தங்கசரமாலை சணபகப்பூமாலை ஆண்டிதோட்டத்தண்ணிலே ஆய்ந்தமல்லிமாலை.

### தாய்தந்தையர்வளர்த்த அருமைப்பாடல்.

மயிலேகுயிலே எங்களம்மான் மயிலைப்போலே பெண்ணைப் பெற்றாள் சீமைத்துரையெங்களப்பன் சிமிழைப்போலே பெண்ணைவளர்த்தான்.

### அம்மானையாடும்கொப்பி.

உப்புஇல்லாப்பூளங்களண்ணிக்குத்தாழம்பூ [illegible]ணிக்கு வைத்தாம்பூ.

### நெல்லுக்குத்தும்பாடல்.

நெல்லுகுத்துறபெண்ணே சும்மாபார்க்கிறு யென்னை புருஷன்வரான்பின்னே புடைத்துப்போடடி கண்ணே ஆ ஹூங் உ ஊங்.

### நிலாச்சோறு சமைத்தல்.

அரிசியைக்குத்துமுன்னே யரித்துக்கழுவுபின்னே
உலையிலரிசியோடு உடனேமேலேமூடி
கொதித்து வெந்தபின் வடித்துக்கொட்டி ஆற்றியெடுத்து
கத்தரிக்காயையறிந்து காரம்புளிப்புதெரித்து
உப்புமசாலும்போட்டு ஒத்திருக்கக்கூட்டு
வெந்தபின்னே தாளித்து விரிதாயிலையிலமைத்து
யாவரும்கூடிப்புசிப்போம் இன்பமாகவசிப்போம்.

### மாவளிசுற்றல்.

மாவளிபோமாவளி மாவளிக்காரன்பெண்டாட்டி
மாக்கால்பிள்ளை பெற்றாளாம்
எடுக்கவந்தசிமாட்டி இடுப்பொடிந்துசெத்தாளாம்
பார்க்கவந்தசிமாட்டி பல்லொடிந்துசெத்தாளாம்
தூக்கவந்தசிமாட்டி தோளொடிந்துசெத்தாளாம்
சும்மாவந்தசிமாட்டி சுருண்டுவிழுந்துசெத்தாளாம்.

### சிற்றுண்டிவிற்றல்.

காசாலட்டு கைமேலேதுட்டு போனால்வராது பொழுதுபோனால் நிற்காது.

### சிற்றுண்டியுண்ணல்.

மண்ணடியில் விற்கும்லட்டு வாங்கிமடியில்கட்டி எடுத்துக் கொஞ்சமபிட்டு எனக்கேமுன்னேபிட்டு உண்டு விடுவெப்பம் ஓடுகொஞ்சம் பார்ப்போம்.

### தோட்டவிளையாடல்.

பங்கம்இலை புளியம்இலை பெய்திருக்குது பொன்னைப் பன்தோட்டத்தில் பிருத்திருக்குது அப்பா வாரோன் அவ்விடத்தில் பூச்சியிருக்குது பூச்சிக்கு என்னையில் மருந்திருக்குதுகட்டாரி சேலையின்மேல்கண்ணிருக்குது மாமனுக்கெனக்குமொரு வம்பிருக்குது.

### மாமனையேசல்

மாமாடாமாமா மாமாஞ்சோலை நீவரும்வேளை நிலைக் கண்ணாடி சந்தனப்பொட்டு சரிகைதலைப்பா கைமல் லவாட்டு மகிழ்லாங்குகோட்டு சாயதோவத்தியடா மாமா சரியில்லை புத்தியடா.

### மாமனுக்குப்புத்திகூறல்.

மாமாமாமா பன்றாடே மாமியார்வீட்டுக்குப் போகாதேசக்கலாயைதின்றதே சூக்கையறுத்துசனசாகாதே நாணமெத்தபேசாதே நாக்கையறுத்துச்சாகாதே.



### அத்தானையேசல்

அத்தானே அத்தானே வாருங்கள் அமரிக்கையாயுட்காருங்கள் ஆறபணந்தாருங்கள் அக்காளழகைபாருங்கள் உங்கள்கண்ணே பூனைக்கண் உசந்தமூக்கோ கிளிமூக்கு பேசும்நாக்கோ மீன்நாக்கு பெருந்தவாயோ வொருசாய்வாய் நல்லவயிறோ வண்ணான்சால் நடக்குங்காலோ வளிக்கால் அந்தழகுக் கொருவாயேன் இடத்தைவிட்டு எழுந்துபோயேன்.

### அத்தானுக்கு அறிவுறுத்தல்.

அத்தான் வந்தானே என்ன சொன்னானே - ஆற்றிலிருக்கிற பாவக்காயை அறுக்கச் சொன்னானே - இலையைப்போட்டு சோறு வைத்தான் தீப்பியென்றானே அடையைச்சுட்டு கையில் கொடுத்தான் வாட்டியென்றானே - பிள்ளையைப்பெற்று கையில் கொடுத்தான் பொம்மையென்றானே.

### அத்தைமகனை ஏசல்.

பூபூபுளியம்பூ பொன்னைத்தான் கொண்டைக்குத்தாழம்பூ, அத்தைமகன்வாசலிலே அதோநிற்கிறான் பாருங்கள், மீசையின் முறுக்கைப்பார் மேலே சரிகைக்குல்லாயைப்பார், சொக்காயின் சொருகைப்பார் தோவத்தியின் மினுக்கைப்பார், கையில் குடையின் ஒழுங்கைப்பார் கடியாரத்தின்கொலுசைப்பார், இங்கேவந்தகாரியம் என்னவென்றுகேளுங்கள்.

### மாமனையும் அத்தானையும் சந்தோஷப்படுத்தல்.

சின்னசின்ன செடிகுளுங்க சித்திரமணி ரதங்குலுங்க வண்ணிமரங்குலுங்க வந்திடுங்கள் என்பிறகே, மங்கைதவி

லேமாடிருக்க மந்திரப்பெண்கள் நாமிருக்க கொண்டையி
லேபூயிருக்க குற்றமென்ன ராஜாவே.

பாலிகைகளுக்கும் அத்தானுக்கும் சம்வாதம்,

அத்தான் சித்திரக்கொள்ளி உனக்கெத்தனை பிள்ளை
பாலிகை சாமிகொடுத்த சப்பாணிப்பிள்ளை.

பச்சைக்கிளியேயோடிசின்னி பவழக்கொடியேயோடி சின்னி என்னைத்தொடாதேடிசின்னி என்பாவம் கொள்ளாதேசின்னி ஆலமரத்தடியேசின்னி ஆறுமாதம்பார்த்தேனடிசின்னி இலவமரத்தடியேசின்னி எட்டுமாதம்பார்த்தேனடிசின்னி என்முகம்பாராயோடி சின்னி எனைமோசம் செய்யாதடி சின்னி கட்டிக்கரும்பேடிசின்னி கண்ணின்மணியேயோடிசின்னி·

பூசிகள் ஒருபொம்மைக்குச் சின்னியென்று பேரிட்டு அதைக் கையில்வைத்துக்கொண்டு இந்தப்பாட்டைப்பாடி விநோதமாய் ஆட்டுதல்.

கிளிப்பாடல் ஜாவளி.

அரசமரத்துக்கிளி ஆசாரம்பேசுங்கிளி
பாலன்வடிவேலன்கிளி பாடுதுபார்எல்லோரும்
பாருங்களே பாருங்களே (1)
புன்னைமரத்துக்கிளி புதுமைமெத்தப்பேசுங்கிளி
மாணிக்கம்வளர்த்தகிளி பண்பாகஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே (2)
பாக்குமரத்துக்கிளி பதங்கள்மெத்தப்பாடுங்கிளி
மரகதம்வளர்த்தகிளி மகிழ்வாகஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. (3)
நந்தவனத்துக்கிளி ராகரசம்பேசுங்கிளி
நடராஜன்வளர்த்தகிளி நலமுடனேபாடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. (4)



பூங்காவனத்துக்கிளி புலவர்போல்பேசுங்கிளி
பாங்காய்வளர்த்தகிளி பாடுதுபாராடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே.

பெண்கள் 5-வயதுமுதல் 10-வயதுவரையில் இரவில் நிலாச்சோறு சமைத்தல் முதலிய விளையாடல்கள்.

இஷ்டசித்திப்பிள்ளையார்.

உத்தராயண தநுர்மாதத்தில் பாலிகைகள்யாவரும் ஒன்றுகூடி பிள்ளையாரை ஸ்தாபிதஞ்செய்து சூழ்ந்துவந்து கொப்பியடித்தல்.

தநுர்மாதத்துக்கொம்மி.

பிள்ளையார் பிள்ளையார் அவரெங்கெங்கே பிள்ளையார், கத்திரித்தோட்டத்திலே களைகொத்துறார் பிள்ளையார், அங்கேயும் போய்ப்பார்த்தேன் அவரெங்கையோ பிள்ளையார், செட்டித்தெருவிலே செண்டாடுகிறார் பிள்ளையார், அங்கேயும் போய்ப்பார்த்தேனவரெங்கையோ பிள்ளையார், கோமுட்டித் தெருவிலே கொண்டாடுகிறார் பிள்ளையார், அங்கேயும் போய்ப்பார்த்தேனவரெங்கையோ பிள்ளையார், வாணியத்தெருவிலே வாதாடுகிறார் பிள்ளையார், அங்கேயும் போய்ப்பார்த்தேனவரெங்கையோ பிள்ளையார், பிள்ளையார் கூடையிலே கிடக்குதே எத்தாலே கட்டலாம் இனியேதாலேகட்டலாம்.

துட்டாலேகட்டுறேன் தூசுகள்படருமே
பணத்தாலேகட்டுறேன் பாசைகள்சேருமே
எத்தாலேகட்டலாம் இனியேதாலே கட்டலாம்

ஒருகட்டி மூங்கில்விளக்கு மண்டபங்கட்டி, மண்டபத்துக்கு மண்ணாஞ்சி, மாணிக்கப்பொன்னாஞ்சி எத்தாலேகட்டலாம் இனியேதாலேகட்டலாம்.

சந்துகட்டிப்பொன்னுலே சூரியவாசலும் பொன்னுலே, அரசட்டிப்பொன்னுலே அரண்மனைவாசலும் பொன்னுலே.

குதித்தடிக்கும் கொம்மி,

பல்லவி.

கொம்மியடிப்பெண்கள் கொம்மியடி-உடல்
குலுங்கக்குலுங்கக் கொம்மியடி.

அநுபல்லவி.

செம்மையுறநாளும் நித்யகல்யாணனைச்
சேர்ந்து கும்மி யடிக்கடி
துயர் தீர்ந்து கும்மி யடியுங்கடி.

சரணங்கள்.

வானவர் போற்றுந் தூயனடி-மலர்
வள்ளிமகிழுந் தோளனடி
தானவர் தங்குலகாலனடி-உயர்
தங்கமடித் தேவசிங்கமடி, (1)
பிறவிப்பிணியைத் தீர்த்திடுவான்-பரம
பேசுவதற்பதஞ் சேர்த்திடுவான்
அறிவு நிலைபாலிடுவான்-பேர்
அன்புக்கிரங்கிக்கண் ணோக்கிடுவான். (2)
விண்ணோர்க்கமுதீந்த துயனடி-உயிர்
வேதகமந்து தித்தியனடி
என்னுமன்பரது கூலனடி-விதி
எந்துமாமறை தமூலனடி. (3)
மங்கையணிவீற மிர்த்தனடி-இனை
மைத்தர்பணிந் திடுங்கர்த்தனடி
மங்களமார்ந்தொளிரத்தனடி-மூத
மாசனசோதை தன்சேயடி. (4)

விளையாடல்கள்.

பொம்மைக்குக்கலியாணம் செய்யவே வேண்டும்
கம்மஞ்சிமிக்கை கைக்குப்பொன்பாட்டில்



செம்மைப்பட்டைச் சிகப்புசிற்றாடை
அம்மணிவாங்கி யருளடியேனக்கே.

பெண்கொள்ளல்.

சின்னசின்ன பெந்திரமா திருவள்ளூர் கோபுரமாம் எங்கவீட்டத்தைமகன் என்னைக்கொள்ள மாட்டேனென்றான், மந்தையிலேமாடிருக்க மதுரைபெண்ணாயிருக்க, சொண்டையிலே பூவிருக்க குற்றமென்னராஜாவே, அ பெண்ணை வைக்கப்பூலெ அம்பலம்தேடி போனண்டி, வெள்ளை மலைபோர வெற்றிலையாக் கொடிமிதிக்க உண்ணவாமருமகளை பண்ணினது போதுமத்தே பெண்ணையுனைப்பாரோ பெற்றோரே சொல்லுங்கள் என்னிலைக்கு சிப்பிக்குள்ளே இரத்தினமாய் மத்சனிக்கே, வாரிமுடித்துக்கொண்டு வந்திருப்பான் சந்தியிலே சந்தையிலேமதிப்பான் சந்தனத்தைத்தோடுப்பான், பூலையிலேமறிப்பான் பூனாரத்தை தொடுப்பார்.

மாமியார் கலியாணப்பெண்ணை அழைத்தல்.

சிப்புவைத்தசிம்மிலிருந்து வாடிமருமகளே
சிப்பைவைத்தாலெனக்கென்ன அது
சிம்மிலிருந்தாலெனக்கென்ன

கட்டிக்காரிகாரந் தொட்டிலிருந்து வாடிமருமகளே
கட்டிக்காரிவந்தாலெனக்கென்ன அது
தொட்டிலிருந்தாலெனக்கென்ன

மாலைவைத்த மடியிலிருந்து வாடிமருமகளே
மாலைவந்தாலெனக்கென்ன அது
மடியிலிருந்தாலெனக்கென்ன

கூரைவைத்த கொடியிலிருந்து வாடிமருமகளே
கூரைவந்தாலெனக்கென்ன அது
கொடியிலிருந்தாலெனக்கென்ன

தாலிவந்து தரையிலிருக்குது வாடிமருமகளே
தாலிவந்தா லெனக்கென்ன அது
தரையிலிருந்தாலெனக்கென்ன
பார்ப்பான்வந்து பஞ்சாங்கம்சொல்லுகிறான் வாடிமரும
பார்ப்பான்வந்தா லெனக்கென்ன அவன் [கமளே
பஞ்சாங்கம்சொன்னா லெனக்கென்ன
மாப்பிள்ளைவந்து மணைமேலிருக்கிறான் வாடிமருமகளே
மாப்பிள்ளைவந்தா லெனக்கென்ன
மணைமேலிருந்தா லெனக்கென்ன

மாமியார் கலியாணப்பெண்ணை அலங்காரஞ்செய்ய அழைக்கும்போது கலியாணப் பெண்பிணங்கி இன்னுஞ் சிலர் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டுபோய் நலங்கிடல்.

பெண்ணுக்கு நலங்கிடல்.

நலங்கிடவாருங்களிப்போ நங்கையரெல்லாம் (நல)
நால்வகைவர்க்கஞ்சேர்ந்த நலமானசந்தனத்தை
நாகபூஷணனுக்கும் இலட்சுமிதேவிக்கும் (நல)

அல்லல்கள்மிகப்புரிந்த அசுரர்கள்சிரமரிந்த
வல்லராமமூர்த்திக்கும் நல்லசீதேவிக்கும் (நல)
பாலுக்குயிரையுமுண்ட பாற்கடல்வெண்ணைகாண
பாலனுங்கோபாலனுக்கும் ருக்மணிதேவிக்கும் (நல)

மணமகனுக்கு நலங்கிடல்.

கோவைப்பழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
கொவிலாமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (1)
நாகப்பழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
நாமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (2)
அஞ்சுச்சிப்பழம்போல எங்கள் பெண்ணழகு-இந்த
அழகுசெட்டையாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (3)
எலுமிச்சம்பழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
எலிமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (4)



தம்பதிகளுக்கு நலங்கிட்டு மணமாலையிட்டமறுநாள்

ஊஞ்சலிடுதல்.

சீரானபொற்பலகை திகழச்சேர்த்து
செம்பவளக்கால்நான்கு சேரவேநாட்டி
ஏரானவயிரச் சங்கிலியுந்தூக்கி
நற்மரகதக் கொடுங்கையும்பூட்டி
சீரானநவரத்ன பீடமமைத்து
திகழிலாமுத்துத் தொங்கல்நிறைந்தஊசல்
பேரானஜானகியாள் பிணையாய்க்கூட
பெருமையுறு ஸ்ரீராமராடி (ஊசல்)

தேவர்முதல்விஞ்சையர்கள் தெளியாழ்வல்லோர்
தோளாகவந்துஜய விஜயமென்ன
பாவில்திருவாய்மொழியைப்பலருங்கூடி
பாலவயர்கள்குழலிமனம் களிக்கப்பன்ன
சாவிகலைதுறவர்மனங் கனிந்துபோற்றக்
களங்கமிலா வடியர்குழாங்கள்சூழ
தேவிஜானகிமணக்கை சிறப்பாய்க்கூடி
திகழுதசரதராமராடி. (ஊசல்)

சங்கீதவாத்தியங்கள் தழங்கவேத
சாமகானமுமெய்யர் தழைக்கவோத
இங்கிதமாய்க்கணிகையரும் ஏற்பாயபாவ
இராகதாளங்களுமே யிசையதாக
பொங்கும்பேரொலிகேட்க இன்பாயாடி
இன்பமாய்லாலி பெச்சரிக்கைபேச
மங்களமாய்ஜானகியை மணமாய்க்கூடி
மணமகிழும் ஸ்ரீராமராடி (ஊசல்)

திருமணமும் மங்களவாழ்த்தும்.

அத்தைமகள் உத்தியைகொள்ளவே வேண்டும்
அழகான திருதாலி கட்டவே வேண்டும்

கடவுளைப் பலநாளுந் தொழவே வேண்டும்
கவித்திரப் பிள்ளையைப் பெறவே வேண்டும்
குலம்விளங்கக் கிருஷ்ணனென் றழைக்கவே வேண்டும்
குதலைச்சொல் கேட்டுமிக மகிழவே வேண்டும்
வருத்தமொ யில்லாமல் வளரவே வேண்டு
வாழையடி வாழையாய் வாழவே வேண்டும்

என்று பெரியோர்கள் ஆசிர்வதித்தபின் சிறிதுநாள் மதனும்ரதியும்போல் வாழ்ந்திருந்தொருநாள் இருவரும் சந்நிதிக்குச்சென்று கடவுளை வழிபடல்,

ராஜராஜேஸ்வரிதுதி.

அகிலபுவ னஞ்சரா சரமீன் றளித்தாளு
மாதியே பளிற்சோதியே
அமலகலி யாணகுண மங்கள சொரூபியே
இன்னமேபொளிர் சொர்ணமே
புகலரிய தன்கருணை வாரியே சிரியர்கள்
புந்திபுறை குமாரியே
பொருவினற் றுயிலுஞ் சாலவன் புடனெனைப்
புவியிசைக் காத்தருளுவாய்
ககனநீண்ட டோங்குபல மாடமலி யெழில்மிக்க
கச்சியிற் காமாக்ஷியாய்
அணமதுரை தன்னின்மீ னாக்ஷியாய்க் காசியிற்
காமரு விசாலாக்ஷியாய்
மங்கலம் பொற்றுதிரு வொற்றியூர் தியாகர்தம்
வாமபாகத்தமர்ந்து
வருசுக்ர வாரத்தி லடியவர்க் கருள்செய்யும்
வடிவாம்பிகைச் செல்வியே.

பரமேஸ்வரர்துதி.

அரும்பொன்னே மணியே யென்னே யென்யானை
வதிவே யெனதியிலுரு



மாளாத வெள்ளமே யென்றென்றுபாடினே
னானேனானாடி.
விரும்பியே கூவினே னலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவொரு கண்மாரிபெய்யவே
வேசற் றயர்ந்தேனியா
னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னுமுனை
யிடைவிட்டு நிற்றறுண்டோ
வென்றுநீ யன்றுநா னுனடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுவதோ போ
கொண்டொடு கூட்டிக்கொண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே.

இருவரும் சந்நிதிக்குச்சென்று கடவுளைவழிபட்டு அவரருளைப்பெற்று சுகமாய் இருவரும் வாழ்ந்துமக் களைப்பெற்று மகிழ்ந்திருந்தால்.

இதுபோலவே பெண்கள் தங்கள் குடும்பத்தில்நடக்க வேண்டிய முறைமைகள்,

பாலிகைகள் பணஞ்சேர்க்கும் பாடல்.

ஏலேலோ ஏலேலோ பெண்மயிலே ஏலேலோ ஏலேலோ, குணமிருந்தா லொன்றுமில்லை கல்லுருவ மிருந்தா லொன்றுமில்லை பணமிருந்தா லவர்காலிற் பணிவார்கள் ஜகத்திலுள்ளோர், ஏலேலோ ஏலே லோ பெண்மயிலே ஏலேலோ ஏலேலோ.

ஜனர்.

பணமிருந்தாலது பத்துவகைசெய்யும்-பணமிலாதவ னுலகிற் பிணமாகையாலே பாடுபட்டுப்பணந் தேடவே வேண்டும் பாக்காய்மதிக்கவுட லெடுக்கவே வேண்டும்

ஒருகாசுடன்வேறு ஒருகாசிசேரும் - உபாத்தியிலேயென்
றும் ஊக்கம்வரவேண்டும்-காசுகளைக்காலணு வாங்கவே
வேண்டும் கருத்தாகவதனைமுடி போடவே வேண்டும்
வீணாகச்செம்பொன்று செலவுசெய்யாமல் - வெள்ளிரூ
பாயாக்க விருப்பமுறவேணடும் தரு வெள்ளிரூபாயைச்
சவரன்களாக்கும் தந்திரமுபண்ணு பொருள் சேர்க்கவே
வேண்டும்-எவ்வாறுபணஞ்சேரும் வகையென்றுகேட்டில்
ஜரிதானமார்க்கங்க ளெத்தனைபோவுண்டு பாவாடை
ரவிக்கைகள் ஜதைக்குத்தெரிந்தால்-பலபேர்களுக்குதைவர்
றுபொருள் தருவார் கம்பளிநூல்வேலை 'கற்றுத்தெரிந்
தால்-கழுத்துக்குப்பட்டைகள் ஜோடுபின்னிடலாம்-சித்
திர புஷ்பங்கள் செய்தே-சீரான கொண்டைக்கு அணி
யாகத்தரலாம் - சொகுசாய்த் தலைக்கணிய தொப்பிகள்
செய்யலாம் சுந்தரமுடன்வேற பலவேலை செய்யலாம்-
அங்காரமொக்குகள் அவைபோடத் தெரிந்தால்-அவைவ
ர்க்குங்கற்பித்து அதிலும் பணம்பெறலாம்-சொன்னவ
கையாற்பணஞ் சுலபமாகத்தேடி-சுருக்குப்பையிற்போட்
டுச் சும்மாயிராமல் - வளர்பிறைதனைப்போல வளர்ந்துவ
நாளும்-வட்டிக்குமாறிபணத்தை வளர்க்கவேவேண்டும்-தன்
னுபத்தாய்ப்பத்து நூறாகும்வழியே - உள்ளத்தில் நாடிய
தை கொள்ளவேவேண்டும் கைப்பொருளிருந்தால் கனை
கடீக்கவுண்டு-கம்மல்புலாக்குடன் கெத்திரிப்பாவல்-ஜிம்ம
க்கி கொப்புடன் சீரானமுருகு-சிங்காரவுடையில்லே இக
ழ்மயிர்மாட்டி-காப்புகொலுசுகள் கல்லட்டிகையும் தஙிர்
வீசுவங்கியும் கையின்மோதிரமு - ஒட்டியாணத்துடன்
ஒளிர்கால்கொலுசும் - உற்றவிரலிற்பீலி காலாழிசுற்றும்
மல்லின்பாவாடை மத்தாப்புரவிக்கைகளும் மதிப்பிளா



பவளாழிகளே பட்டுபுடவைகளும் - இன்னமும் பலநகை
கள் ஏற்றவாடைகளும்-இனிதாகக்கொண்டணிந் தெறி
லாயிருந்தால்-பொருளுள்ள பெண்ணேயே புருஷர்களி
லதாக்-பருமானபி-ஐ-ஏம்-ஏபட்டம்பொருந்தும் - நல்ல
மணவாளனை ஸுலபமாகவடைந்து-கழுத்தொடுயும் போல
ஷட்பூரலவாழ்ந்து-நாடுபொருங்கூடி உலகத்திலவர்ந்திடு.
(ஏலேலோ)

## குடும்ப ஒழுக்கம்.

ஏலேலோ- ஏலேலோ உத்தமியே ஏலேலோ ஏலே
லோ, சீரான பெண்ணரசேசிறந்த ஒரு புருஷனைச்சேரா
ய்த்து உன்னைப்பெற்றார் அழகாக மணம்பேசி, ஏலே
லோ ஏலேலோ உத்தமியே ஏலேலோ ஏலேலோ:

## ஜதி.

பந்துஜனக்களுக்கெல்லாம் பரிவாகச் சொல்லி - பர்ண
காகக்கலியாணப் பந்தலலங்கரித்து - வாழைக் கமுகுகள்
வரிசையாய்க்கட்டி-வாத்தியங்கள்வென்று மாண்பாயெ
ரிக்க-கலமுற்றவேலையினுற் புறஞ்சூழ்ந்து பொலிவுள்ள
மாதர்கள் வைத்திட்டு முடிக்க-தக்கவுத்தாலே ஸ்நான
ஞ்செய்வித்து-சார்ந்த பரிமளப் பொடிகள் தயங்கமெய்ப்
பூசி- சரிமலர்க்குழலுக்குத் தூபங்கள்காட்டி - சொர்ண
பூஷணங்கள்பல அலங்கவலங்கரித்து - மாதர்கள் பலர்
சூழ்ந்து மங்களம்பாட வேதியர்கள்பல்லாண்டு விளம்பி
மகிழ்கூற அக்கினியருந்ததி யிவர்சாக்ஷியாக - அருமை
நின்ற தந்தைசெய்தளிக்க-தாலிகட்டியகணவனெதெய்
வமாக-தவறுமலவன்சொல்லும் வழிநிற்கவேண்டும் மா
மியார்மாத்திரனை மதிப்பிக்கவேண்டும் மாறுசொல்லா

மலவர் சொற்கேட்கவேண்டும் கணவனர்கோபிக்க வேரா
ன்றுஞ்சொல்லாதே-காட்டேறிபோலவன் முன்னேநில்
லாதே-ஒன்றுக்குபலசொற்கள் பேசியெதிர்க்காதே ஓட்
டாரம்செய்துபாய் போட்டுப்படுக்காதே-ஆத்திரங் கொ
ண்டொரு அடிபுண்ணேயடித்தால்-அடியென்று மடிபிற்கை
பிடித்திழுக்காதே - இல்லாதபொருள்களுக் கிச்சைவை
யாதே-எக்கேரமுஞ்சொல்லைப் போலரிக்காதே-வீட்டுச்
சங்கதிகளை வெளிற் சொல்லாதே வெட்கப் கெடப்பிறர்
நகைக்கவையாதே-பாழானகோபத்துக் கிடங்கொடாதே
பத்திரகாளியைப் போலத் தலைவிரிக்காதே-வரவுக்குமே
லிட்ட செலவுசெய்யாதே வாழ்நாளெல்லாந்துக்கப் பட
வைத்திடாதே - இதமானவார்த்தையே பேசிவரவேண்
டும்-இஷ்டப்பதார்த்தங்கள் சமைத்துவைக்கவேண்டும்-
கூன்குருடானாலுங் குறைபேசிடாதே-குலங்கெட்டபோ
திலும் குற்றப்வையாதே - அன்னியபுருஷர்மே லாசை
வையாதே-அதனாலவமான மடக்கமுடியாதே-காசுக்கரு
ந்திட்ட கற்புபெண்கோடி - கணக்காகக் கொடுத்தாலும்
மீளவாராதே - அயல்வீட்டுக்கடிக்கடி போகநினையாதே-
அலக்ஷயமாய்பேச வடலெக்காதே - [illegible]
லாய்நடவாதே-வேறுபுருஷரிச்சை கொள்ளத்திரியாதே
இவ்வாறு நடத்திடிற் குடும்பவிஷயங்கள் - எந்நாளுங் கு
றையாம லீடேறிநல்ல-புத்திரம்பேறுடன்போகபாக்கிய
ங்கள்-பொற்பூஷணங் களும் புகழுடன்பெறுவாய் தேர்ந்
து துயர்தீர்ந்து அருள்கூறுங்கியோர்க்கு (ஏலேலோ)

## மாதர்கற்புப்பாடல் ஆனந்தக்களிப்பு.

கர்த்தாவேமுதல்தெய்வமானே-பின்பு
பத்தாவல்லாலுண்டோ பாக்கியந்தானே



புருஷன்வார்த்தைதட்டாதே-முட்டும்
எருதுபோல்நீசண்டைக் கிடுப்புக்கட்டாதே
தேகமுஞ்சீவனும்போலேகொண்ட
மாகணவனுடன் வாழ்வதுமேலே
கணவனுன்மேற்பகை நர்க்கம்-செய்யில்
குணமாகப்பேசிக் குலாவுதல்மார்க்கம்
கற்புநிலையேசிங்காரம்-அது
தப்பினோரழகு சவவலங்காரம்
அரைக்காசுக்கழிந்திட்டகற்பு-நூறு
மரக்காற்பொன்கொடுத்தாலும் வருமோநீசெப்பு
அந்நியனழகனானாலும்-கற்பின்
அரசனைநம்பிப் புருஷனைக்கைவிடாதே
சிற்றின்பந்தானைக்கொடியே-வரும்
குற்றமுப்பழிகளுங் கொடியபோற்கொடியே

என்றவிவேகிகளின் உபதேசங்களை ஒவ்வொரு ஸ்திரீ
யும் கவனித்து நடந்து புருஷருடன் ஒருமைப்பட்டு சுக
மாய்வாழ்ந்து குழந்தைகளைப்பெற்று ஈ மொய்க்காமலும்
எறும்பு கடியாமலும் காற்று வீசாமலும் பனிபெய்யாம
லும் மார்பிலும் தோளிலும் வயிற்றிலுமணைத்து முலை
யூட்டி மூக்குச்சிந்தி நாசியூதி செவிபுருவி நீராட்டி விழி
களுக்கு அஞ்சனந்தீட்டி பலமணிகளும் பூட்டி கன்னங்
கிள்ளி உச்சிமோந்து கண்ணோடு கண்ணும் வாயோடு
வாயும் முகத்தோடுமுகமும் வைத்துக்கொஞ்சிமுத்தாடி
அருந்தனம்போற் பாவித்துப் பொற்றொட்டிலிட்டுத் தா
லாட்டல்.

## ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ.

சொர்பசுங்கிளியே தெவிட்டாதசெந்தேனே
போர்குலக்கொழுந்தேபெருமானே கண்வளராய்

மாணிக்கக்கால்நாட்டி வஜ்ரவடம்பூட்டி
ஆணிப்பொன் தொட்டிலிட்டேன் அருமருந்தேகண்வளராய்
மானேமரகதமே மல்லிகைப்பூசெண்டகமே
தேனேபசுங்கிளியே செல்வமேகண்வளராய் (ஆ)

பெருஞானவாரிதியாம் பெருவகிலேயுதித்த
திருஞானசம்பந்தச் சீமானே கண்வளராய் (ஆ)

தப்பானபுன்சமணச் சார்பைக்கழித்துயர்ந்த
அப்பாதிருநாவுக் கரசேநீகண்வளராய் (ஆ)

வேதாவுங்காணா விமலனைப்பேதையிடத்
தூதாவனுப்புஞ் சுந்தரனேகண்வளராய் (ஆ)

வேளைப்பான்கமல மெல்லடியேபோற்றிசெயும்
மாணிக்கவாசகப்பேர் மாதவனேகண்வளராய் (ஆ)

ஆதிமறைப்பொருளை யகிலமிசைவள்ளுவராய்
நீதிமறையருளும் நின்மலனே கண்வளராய். (ஆ)

இம்மாயைநீக்கி வெளியாகவந்துதித்த
நம்மாழ்வாரேயெங்கள் நற்றவமேகண்வளராய் (ஆ)

கருமமெல்லாம்போக்கும் கதியைத்தரவந்த
திருமழிசையாழ்வாரே செம்மாலேகண்வளராய் (ஆ)

காமனைச்செய்த கஜமணித்தோள் சீர்பாடும்
இராமாநுஜனே இளஞ்சியமேகண்வளராய் (ஆ)

அன்னநடைமெல்லியர்களாசையுடன்முத்தமிடும்
தன்னுகன்னதல்வியெனும் நாயகியேகண்வளராய் (ஆ)

பொன்தொட்டிலில் நித்திரைசெய்து விழித்துக்கொண்ட குழந்தையைத் தாயாரெடுத்து பால்கொடுத்தல்.

நீரசபங்கா சிக்ரமேசனுவென்னும் வர்ணமெட்டு.

பல்லவி.

வாராயென்கண்ணே வந்தென்பாலையுண்ணே
சீராகத்தின்ன சிக்கிரம்மன்ன (வா)



சரணங்கள்.

நித்திரைவிட்டெழுந்து நேரமாச்சுதின்று
தந்திதலழுந்து தனயனேநீயின்று (வா)

கெஞ்சுவருமடா கெஞ்சிபழைந்தேனடா
வஞ்சனேனடாநீந்து வருகிலைமைந்தேனடா (வா)

குஞ்சமணிச்சிலைந்து கொண்டுவந்தேனடா
பஞ்சணையுஞ்சல்லிட்டிக்கனம்பீரடா (வா)

தேவாதுகளை தேவகிதேவிபாலா
வேணுகோபாலா வேண்டினேன்வாரா (வா)

தாய்மார்கள் குழந்தைகளை நற்பழக்கத்தில் கொண்டுவரும் முறைமைகள்.

சாய்ந்தாடல்.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு தாமரைப்பூவேசாய்ந்தாடு குத்துவிளக்கே சாய்ந்தாடு கோவிற்புறாவே சாய்ந்தாடு பச்சைக்கிளியே சாய்ந்தாடு பவளக்கொடியே சாய்ந்தாடு சோலைக்கிளியே சாய்ந்தாடு சுந்தரமணியே சாய்ந்தாடு, கண்ணேமணியேசாய்ந்தாடு, கற்பகக்கொடியேசாய்ந்தாடு, கட்டிக்கரும்பே சாய்ந்தாடு கனியேபொன்னே சாய்ந் தாடு.

கைவீசல்

கைவீசம்மா கைவீச கடைக்குப்போகலாம் கைவீச, மிட்டாய் வாங்கலாம் கைவீச மெதுவாய்த் தின்னலாம் கைவீச, அப்பம்வாங்கலாம் கைவீச அமர்ந்துதின்னலாம் கைவீச, பூந்திவாங்கலாம் கைவீச பொருந்தியுண்ணலாம் கைவீச, பழங்கள் வாங்கலாம் கைவீச பகிர்ந்துண்ணலாம் கைவீச, சொக்காய் வாங்கலாம் கைவீச [illegible]காய் போடலாம் கைவீச கோவிலுக்குப் போக[illegible] [illegible]வீச கும்பிட்டு வரலாம் கைவீச, சும்மாயிருந் [illegible] கைவீச திரும்பிவரலாம் கைவீச, கம்மல்வா[illegible] கைவீச காதில் போடலாம் கைவீச.

### தலைப்பிடித்தாட்டல்.

சின்னி தலைநொந்ததே சின்னக்கா தலைநொந்ததே பாபா
தலைநொந்ததே பாபாக்கா தலைநொந்ததே.

### குழந்தைக்குப் பாற்சாதம் ஊட்டல்.

அம்மா அம்மா பூச்சி சின்னி சின்னி தேச்சி
இன்னங்கொஞ்சம் சோச்சி பின்னுங்கொஞ்சம்பாச்சி
எல்லாஞ் செரித்துப் போச்சா இன்னும் பெருமூச்சா
நில்லுண்ட தாச்சா நீயே பெரும் பாச்சா.

இவ்வாறு விளையாடச்சென்ற குழந்தையைக் காணோமென்று தாயார் வருத்தமுற்றுத் தேடுதல்.

### குழந்தையைத்தேடும்பாடல்.

என்குழந்தைபோனவிடமெனக்குத்தெரியாதே
எந்தன் துரைமிக்கசோபி என்னசொல்லுவாரோ
நல்லதொருதொட்டில்கட்டிநான்வளர்த்தகுழந்தை
நான்வளர்த்தகுழந்தைதனை நஷ்டமிட்டவளாரோ
தங்கச்சிலங்கைகட்டி தரையில்விட்டமகவு
தரையில்விட்ட மகவுதனை சாத்திக்கொண்டவளாரோ
வெள்ளியினாற்சலங்கைகட்டி வெளியில்விட்டமகவு
வெளியில்விட்டமகவுதனை மடக்கிவைத்தவளாரோ
கூவுங்குயில்தொனியுடனே கொஞ்சிவரும்பாலன்
கொஞ்சிவரும்பாலன்தனை கூவியழைத்தவளாரோ
தங்கதுரையெந்தன்சாமி தானென்சொல்லுவாரோ
மாயமலைபழனிவடி வேலாகிருபைசெய்வால்

### சொல்பழக்கங்கற்பிக்கும்பாடல்.

கும்பகோணமேகோணம் குறவன்நட்டதேசோச
ஸ்ரீராமர்விட்டதேபாணம் அதுவெங்கேபோனதே.

[கா



### உள்ளங்கையில் நெல்லுருத்திக்காட்டும் பாடல்.

அகத்திக்கீரை பிண்ணாக்கு அதிலே கொஞ்சம்நெய் வாரு, பிஞ்சிக்கத்திரிக்காய்பொரியல் பின்னுங்கொஞ்சம் நெய்வாரு.

### கையோடுகைதட்டி

### கும்மியடிக்கச்சொல்லும்பாடல்.

தந்தானகும்மி தானானகும்மி
அன்னதானத்துக்கு சின்னகும்மி

### புறாக்குக்காட்டல்.

காக்கா-கண்ணுக்குமைகொண்டுவா
குருவி-கொண்டைக்குப்பூக்கொண்டுவா
கொக்கு-குழந்தைக்குத்தேன்கொண்டுவா
கிளியே-கிண்ணத்தில்பால்கொண்டுவா

அப்பாமுன்னேவாருங்கள் அழாதேயென்றுசொல்லுங்கள்.

### நிலாவை அழைத்தக்காட்டல்.

நிலா நிலா வா வா - நில்லாமலோடிவா, மலைமேலே ஏறிவா - மல்லிகைப்பூக் கொண்டுவா, நடுவீட்டில் வையே - நல்லதுதிசெய்யே, வெள்ளிக்கிண்ணத்தில் பால் சோறு - அள்ளியெடுத்து அப்பன்வாயில், கொஞ்சிக் கொஞ்சியூட்டு - குழந்தைக்குச்சிரிப்புகாட்டு.

### நிலாவோடு வார்த்தையாடிக்காண்பித்தல்.

நிலாநிலா எங்கெங்கேபோறாய், மலையாங்குளத்துக்கு மண்வெட்டப்போறேன், மண்ணென்னத்துக்கு சொப்புபண்ண, சொப்பென்னத்துக்கு மாடுவாங்க, மாடென்னத்துக்கு சாணம்போட, சாணமென்னத்துக்கு வீடு மெழுக, வீடென்னத்துக்கு பிள்ளைபெற, பிள்ளையென்னத்துக்கு ஓலைப்பாயிலே ஓடிவிளையாட, ஈச்சம்பாயிலே யிருந்துவிளையாட, பிரப்பம்பாயிலே புரண்டுவிளையாட

கோரைப்பாயிலே குதித்துவிளையாட, தாழம்பாயிலே தவழ்ந்துவிளையாட.

### வெண்ணிலாவை வினவல்.

வித்திலாமலே விளைந்த வெண்ணிலாவே-நீதான்
விளைந்தவண்ணமேது சொல்வாய் வெண்ணிலாவே
அந்தரத்திலாடுகின்றாய் வெண்ணிலாவே-அவர்
ஆடும்வகையெப்படியோ வெண்ணிலாவே
ஞானமாய்விளங்கும் வெண்ணிலாவே-என்னை
நானறியச்சொல்லுகண்டாய் வெண்ணிலாவே
அந்தரங்கசேவைசெய்ய வெண்ணிலாவே-எங்கள்
ஐயர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே
ஆருமறியாமலிங்கே வெண்ணிலாவே-அரு
ளாளர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே.

### அணையாடையிலிட்டுத் தாலாட்டுதல்.

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ

முத்தே பவளமே முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக்கொழுந்தே கோமளமே கண்வளராய்
ஆயர் குலத்தில் அவதரித்த மாமணியே
மாயனே கண்ணா மதிபனே கண்வளராய் (ஆ)

தாயார் பால்கொடுத்தபின் குழந்தை தவழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கையில் வேறுசிலமாதர்கள் அக்குழந்தையை யெடுத்து அதுசெய்யும் சேஷ்டைகளைத் தாயிடங்கூறல்.

### கீர்த்தனை.

கிருஷ்ணன் செய்திகேளும்-மாய
கிருஷ்ணன் செய்திகேளும்

அரிதுதவழ்ந்துவந்து-எங்களை
அணைத்துக்கொள்ளுறானே (கிருஷ்ணன்)
உறியடுக்கிலேறி தயிர்பால்
உறிஞ்சியருந்துறானே (கிருஷ்ணன்)



பின்னேவந்து மெதுவாய்-பெண்கள்
பின்னல்பற்றி யிழுப்பான் கிருஷ்ணன் 3
திரும்பிபார்த்தக்கால்-யாரோ
தெரியாதென்று சொல்வான் கிருஷ்ணன் 4
முகத்துக்கெதிரேவந்து-விரைவில்
முத்தமிட்டு மறைவான் கிருஷ்ணன் 5
தேடிபார்க்கும்போது எங்கும்
தெரிந்திடாமலொளிப்பான் 184438 கிருஷ்ணன் 6
எங்கள்புருஷர் கண்டால்-நாங்கள்
என்னசெய்வமம்மா கிருஷ்ணன் 7
குழந்தையென்றுபார்த்தோம்-அவன்செய்
கொடுமைமெத்தசகியோம் கிருஷ்ணன் 8
பொறுத்தவரைக்கும்போதும்-உன்மகனுக்குப்
புத்திசொல்லுமம்மா கிருஷ்ணன் 9

### சகானாராகம்-ரூபகதாளம்

குழந்தைக்குத் தாயைக்கொண்டு புத்திசொல்லச்சொல்லுதல்

பல் புத்திசொல்லடியசோதே-உன்மகனுக்கு
புத்திசொல்லடியசோதே

புத்திசொல்லடியசோதே நித்தமுங்கள் கிருஷ்ணனுக்கு
…த்தைமாமி நாத்தியென்று சற்றுமரியாதை யில்லை
…ட்டியென்னை யணைந்தாலு அணைந்ததற்கு
…தாட்டிதாலி கட்டிறு
…ட்டவும் மதித்தாறு இப்படிப்பட்ட
…தட்டபிள்ளை பெற்றமேதனே
…துஷ்ட தன்மை பிறந்தாலும்
…பட்டுமரி யாதையில்லை
…ட்டிவின்மேல் உறியில்-வெண்ணெய்
…ட்டிவைக்க ஆசையில்லை

சந்திரமெத்தை மீதிலிருந்து அசைந்தசைந்து
நித்திரைசெய்வது தான்கண்டான்
மெத்தனவே யோடிவந்தா னகையினால்வாயை
பொத்தியா யமைத்துக்கொண்டான்

மட்டுமீறியென்ன செய்வோம்
வெட்கத்தெயாரோடே சொல்வோம்
இத்தனைபேர் பெண்களிலே
பத்தினி யொருத்தியில்லை

பண்டுபழி யெங்கள்மீதி-இராமகிருஷ்ணனை
தண்டனைசெய்ய வொண்ணாதா
பண்டிங்காணாதே யிருந்தால்-அவன்மனம்
சண்டையேனென் றெண்ணாதா

வண்டுபோல் இருந்தசுகம்
கண்டவ ளிவளல்லவோ
பெண்டென்று சொல்லுவதைக்
கொண்டவ ளறிந்ததில்லை-புத்தி

## தாயார் குழந்தைக்குப் புத்திகூறல்

சாமாராகம்-ஆதிதாளம்

பல் வண்டாவுனக்கிந்த துஷ்டத்தனமிருந்தால்
வேண்டாமிக்காரியம் என்வார்த்தையைக்கேளடா

சரணங்கள்

உரியில்தயிர்பாலை உருட்டிவிட்டோடினாயா
பிரியமுடனிருக்கதே வார்த்தைக்கேளடா
சட்டிவெண்ணையெல்லாம் சனுவிட்டுதின்றாயா
பட்டுகாரிகள்கண்டால் பதைத்தடியாரோடா
வீடுவீடாய்நுழைந்து வீட்டுக்கதவடைத்து
தாடிமுத்தந்தாவென்று தாவிக்கையைபிடித்தாயா
இக்குவலயந்தன்னில் என்பேரைபழிக்கவந்தாய்
முகுந்தராமதாஸ தாசன்கையாரோடா



## குழந்தை ஸ்திரீகளின்மீது தாயாரிடம் குறைகூறல்

பூரிகல்யாணி-ராகம்-ஆதிதாளம்

பல்லவி

பொல்லாத கோபிகளம்மா அவர்கள்
இல்லாதவார்த்தைகளைச்சொல்லுவாரம்மா (பொ)

சரணங்கள்

இருட்டிலே வெண்ணெயெட்டுமோ அங்கே
இருக்குமுரியில்வெண்ணெய் எனக்கெட்டுமோ
இருட்டிப்பே யென்னைத்திட்டுமோ இந்த
மிரட்டர்சொல்லுகிறது சரிகட்டுமோ (பொ)
வெண்ணெயிங்கே கிடையாதோ தங்கள்
இன்னியிலேசிந்த வெண்ணெய்போதாதோ
அன்னையுக்குத் தெரியாதே இந்த
வின்னணக்காரர்கள் என்னாலாகாதோ (பொ)
அம்மாநான் சின்னச்சிறியேன் இந்த
பொம்மையான பெண்களுடனொன்றுமறியேன்
செம்மையாய பெண்குற்றஞ்சிறியேன் விளைச்
சம்மாமாமொருக்கா ரியம்புரியே (பொ)
பாலனென்ன வசுராம்மா வாதனை
பாலதாசனென்றுமை விசாரம்மா
பெருமின்றும் கூசாரம்மா இந்த
வீணானவார்த்தைகளை பேசாரம்மா (பொ)

இவ்விதமாகச்சொல்லிய ஸ்ரீபாலகிருஷ்ண மூர்த்தியை நோக்கி தீர்க்க தெண்டனிட்டுப்பெண்கள் சொல்லும்

## ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி துதி

கடிகமழுந்துளவமணி மார்பனேயென்
கண்மணியேயெசக்காலே கனைவாழுமன்று
படியுமேமாடியாக வளர்ந்தபாதா
பக்தவச்சலமுகுந்த பட்சிராஜா

கொடையுடையகாரம்புயனே யாயர்பாடிக்
கோபிகளுக்கின்பருளுங் குருந்தேமுன்னு
மடியவரேம்புத்ரமித்ர களத்திராதி
யருஞ்செல்வம்பெற்றுளநீ வருள்செய்வாயே

நாமாவளி

அம்பலத்தரசேயருமருந்தே ஆனந்தத்தேனே யருள் விருந்தே, பொதுநடத்தரசே புண்ணியனே புலவரெலாம்புகழ் கண்ணியனே, மலைதருமகனே மடமயிலே மதிமுகவமுதே யிளங்குயிலே, ஆனந்தக்கொடியே யிளம்பிடியே யற்புதத்தேனே மலைமானே சிவ சிவசிவ சின்மயதேஜா சிவசுந்தரகுஞ்சித நடராஜா, படனவிவேக பரம்பரவேதா நடனசபேச சிதம்பரநாதா அரிபிரமாதியர் தேடியநாதா அரகரசிவசிவவாடியபாதா, அந்தவனக் கண வம்பரபோகா இம்மலவம் பிரவம்பிவகபாதா அம்பரவிம்பசிதம்பரநாதா அஞ்சிதாஞ்சித குஞ்சிதபாதா தந்திரமந்திர யந்திரபாதா சங்கரசங்கர சங்கரநாதா கனகசிதம்பர சங்கரபுரஹர அனகபரம்பர சங்கரஹரஹர, சகலகலாண்ட சராசரக்காரண சகுணசிவாண்ட பராபரிபூரண இக்கரைகடந்திட லக்கரையே இருப்பது சிதம்பரஞ் சர்க்கரையே என்னுயிருடம்பொடு சித்தமதே இனிப்பது நடராஜ புத்தமுதே ஐயர்திருச்சபைநாடகமே ஆடுதலானந்தநாடகமே உத்தரஞான சிதம்பரமே சித்திபெலாந்தருமம்பரமே அம்பலவாசிவமாதேவா வம்பலவாவிங்குவாவாவா நடமிடுமம்பல நன்மணியே புடமிடுசெம்பலப் பொன்மணியே உவட்டாதுசித்திக்கு முள்ளமுதே தெவிட்டாதுதித்திக்குந் தெள்ளமுதே நடராஜவள்ளலை நாடுதலே நற்சித்த



ழிலாம் விளையாடுதலே, அருட்பொது நடமிடுதாண்டவனே யருட்பெருஞ் சோதியென்னாண்டவனே, நடராஜமாணிக்க மென்றதுவே நண்ணுதலாணிப் பொன்மன்றதுவே, நடராஜபலமதுநம்பலமே நடமாடுவது திருவம்பலமே.

அருள்விளக்கமாலை.

என்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே, மதியார்க்கும் மதிப்பவர்க்கு மதிகொடுக்கும் மதியே, நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்றநடுவே, நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே, எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே, என்னரசேயான்புகலு மிசையுமணிந்தருளே. (1)

தனிச்சிறியேன் சிறிதிங்கே வருந்திய போததனைத் தனவருத்த மெனக்கொண்டு தரியாதக்கணத்தே, பனிப்புருமவ் வருத்தமெல்லாம் தவிர்த்தருளுமகனே. பயமுனக்கென் றென்றனைப் பரிந்தணைத்த குருவே, இனிப்புருநல்மொழி புகன்றேன் முடிமிசைமலர்க்கால், வினையமர்த்தி யெனையாண்ட வென்னுயிர்நற்றுணையே கனிந்த நறுங்கனியே யென்கண்ணே சிற்சபையிற், கலந்தநடத் தரசே கருத்துமணிந்தருளே (2)

இருளிரவி லொருமூலைத் திண்ணையில் நான்பசித்தே, இளைப்புடனே படுத்திருக்கவெனைத்தேடிவந்தே, பொருளுணவு கொடுத்துண்ணச் செய்வித்தேபசியை, போக்கியருள புரிந்தவென்றன் புண்ணிய நற்றுணையே, வருளிரவிக்கியெல்லா வாழ்வுமெனக்கருளி, மணிமேடைநடுவிருக்க வைத்தவொருமணியே, யருளுணவுமளித்

தென்னை யாட்கொண்டவனே, யம்பலத் தென்னரசே யென்னலங்கலக்கருளே. (3

நான்பசித்த போதெல்லாம் தான்பசித்ததாய் நல்லு ணவுகொடுத் தென்னைச் செல்வமுறவளர்த்தே பூவு லோசித்த வினைபோன்றுத் தோன்றாத வகையே பெ ண்ணிய தென்னூழ்தனைக் கெடுக்கவந்தனையே, வ ண்பதித்த செம்பொற்று நான்றுமுகந்த மரிதாம் வா லெனச்சிக யாக்கையை வாமனிதப்பிறவே, தென்பரித னமணமே திருப்போதுகில ஞானத் திருவடைந்தே யாசே என்சிறுமொழி யேற்றருளே. (4

## விடுகதைகள்.

முன்னொரு வரின் பேராம் முதலெழுத்தில்லா விட்டால், மன்னர் மன்னர்பேராம் நடுவெழுத்தில்லா விட்டால், கண்ணமாம் விலக்கின் பேராம் கடையெழுத் தில்லாவிட்டால், உண்ணிய தேனின்பேராம் உரைப்பீர்க ளூரின்பேரை — மதுரை

மின்னிலைப்போல்பூப்பூக்கும் — பூசினிப்பூ

பெரியகடார்த்தங்காய்போல்காய்காய்க்கும் [பூசினிக்காய்

கருப்புச்சட்டைக்காரன்காவலுக்குகெட்டிக்காரன் [பூட்டு

ஆடிமேலே நூரங்கு — மூர்த்திக்கொட்டை

நோய்கொடியில்லாமல் மூக்கில்திரிகிறானொருவன் [பன்...

கோயில்குளமில்லாமல் கொட்டித்திரிகிறானொருவன் [குயவ...

ஊரகத்திலே எண்ணுயிர்க்காய் — கேழ்வர...

தச்சனிழைக்காதமரமென்னமரம் — அடப்ப...

கிணற்றைச்சுற்றிப்புல் — கண்ரெப்பை

சின்னவீட்டுநிறையச்சிறு — வாய்நிறையப்பல்

ஊருக்கெல்லாமொரேதுப்பட்டி — ஆகாயம்

ஊருக்கெல்லாமொரேகல் — உப்பு

சின்னவெங்காரம் வீடெல்லாஞ்சிங்காரம் — விளக்கு



ஒருபொரிபறக்க வீடெல்லாம்பொரி — விளக்கு

கொக்குநிற்கநிற்கக்குளம்வற்றவற்ற — விளக்கு

சொம்புநிறையக்கெம்பு — மாதுளம்பழம்

அள்ளுவான்கிள்ளமாட்டான் — தண்ணீர்

எங்கள்மாட்டுக்குறும்புகொம்பு — குத்தால்பாயும் [மவாமுன்று

ஒருநெல்குத்திவீடெல்லாம்உமிபச்சுது — விளக்கு

இரண்டுவீட்டுக்கொருதாலம் — மூக்கு

ஒருபுட்டியில்இரண்டுதைலம் — கோழிமுட்டை

முள்ளில்லாதமீன்என்னமீன் — மூட்டை

கட்டிவிட்டகுருவிகப்பலேறுது — வடை

குத்துக்கருகிக்குழம்வால் — அகப்பை

உரித்துவிட்டகுருவிமருக்குப்போகிறது — புளி

காட்டிலே துளிரத்தம் — குண்டுமணி

காலிரண்டென்டு நடக்கமாட்டானிரு கண்ணுமுண்டு மேலேவிழிகள் நோக்கமாட்டான் மெல்லிநல்லாள் பாலே குடிக்கவையடியான் கொஞ்சம் பாக்குந்தின்பான். ஆலோசனைசெய்து சொன்னவர்க்கு செம்பொன் ஆபரணமே. — பாக்குவெட்டி

மண்ணிலைசேர்ந்து வேலைசெய்வான் குயவனல்ல. வங்காளம் போய்வருவான் செட்டியல்ல கண்ணுண்டு மூக்கில்லை தேங்காயல்ல, காலுண்டு தலையில்லை கபந்தனல்ல, நின்னுண்டு சிலபேர்க்கு இச்சையாவான் ஈசனுக்கும் மாயனுக்கும் பெரியோன் தானே. — கண்டு

கூட்டிலே யிருக்குமது கிளியுமல்ல கொழுந்தோடி யிருக்குமது இரைதின்னாது, காட்டிலே விட்டுவிட்டால் பறந்தேபோகும் கனத்தமன்னர் வாசலிலே காவலாகும் ஈட்டிகத்திபிடித்தவர்க்கு எதிரேநிற்கும் இக்கதையைச் சொல்லுகிறேன் பூவையற்கு நாட்டினிக்கதையை யுரைத்தாரானால் நாமவரைக்குருவென்று வணங்கலாமே [அம்பு

ஈரேழுபதினாலு லோகங்களிலே இருபாமூர்த்தச் சாமைத்திட்டதுமதிலே, மாமேபுளியமா விதைமதிலே வந்தாமெம்பெண்களுக்கு மாண்டமதிலே.

[பள்ளாங்குழி

பொன்னுவெள்ளியும் பூண்டிருப்பவன்போகவே எண்ணெய்வார்த்து முழுகுவள், வர்ணமாயிரம் பூவை முடிப்பவள் வழிநடைக்கு அலங்காரிகாண், சொன்னதாசைப் பணத்தைப்பறிப்பவள் சொல்லென்றாலும் தாசிபரவைகாண், மன்னவாயிந்தகற்கதை தன்னையே முனமகிழ்ந்து வுரைத்துநீபோவையே.

[செருப்பு

ஐவருடனே பிறந்தான் தருமனல்ல அதிலொருவன் சாட்சிசொல்வான் மனிதனல்ல தன்சுவையைத்தான் சுவைப்பான் ஞானியல்ல தரணியெங்கும் புல்சுமப்பான் சண்டாளனல்ல, கன்னியரை மணம்புரிவான் கடைசித்தம்பி கண்டுசொல்வானவனே தங்கச்சிபாமே

[ஐந்துவிரல்கள்

அந்தரத்தில் பறந்திடும் பறந்தேபல்ல அறகானவாலு முண்டு அனுமாரல்ல விந்தையுடன் கட்டினாலும் கட்டுமல்ல வேந்தராதிருநாமம் அவர்க்கேயுண்டு

[காற்றாடி

பேச்சில்லை பெருமூச்சு விடுவான் உணவில்லை மலைசுமப்பான் உயிரில்லை ஓடித்திரிவான் பாதமில்லை தண்ணீர் குடிப்பான், கண்டதுண்டமாய் கரியைத் தின்பான் கண்களில்லை காதம் கடப்பான், குரலில்லை கூச்சலிடுவான் மழையில் நனைவான், வெயிலிற் காய்வான் நோயுமடையான் மருந்தும் புசியான் எப்படி சொன்னாலும் அப்படியே கேட்பான். புகைவண்டி

பிடிபிடி சுப்பல்பொருந்தி அரண்மனை வாசல்கட்டிபார்க்கவந்தராசாக்களெல்லாம்பல்லிளித்தார்கள். மீன்



கனைதனைத்தாளைக் கடையிலேகண்டேன் கண்டவுடனே கொண்டேன் கொண்டவுடனே அடித்தேன் அடித்தவுடனே சிரித்தாள் சிரித்தவுடனே குடித்தேன் தேங்காய்

மதுரமான் எரியில் மான்வந்து நிற்கிறது கட்டடா பிடியடா கன்னாயிறுபோடடா இக்கவிதையை விடுத்தவர்க்கு நூறு வெற்றிலை நூறு பாக்கு சுண்ணம்பு விரல்களால் குற்றுகண்ணும்பு ண்மமர்

முள்ளு முள்ளுக்குள்ளே மூக்குத்திப்பூக்குள்ளே லைக்கப்போருக்குள்ளே கண்டெடுத்தேன் வைரமணி. பலாப்பழம்

பச்சைப்பச் சென்றிருக்கும் பாவக்காயுமல்ல பக்கத்தில் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல உள்ளேவெளுத்திருக்கும் தேங்காயுமல்ல உருக்கினால் நெய்யொழுகும் வெண்ணெயுமல்ல முத்துக்கொட்டை

சந்தனம் புனுகுபோல் விதித்ததைசொல்லவா தகப்பனோராடி வந்து அடித்ததைசொல்லவா செங்கால் நீப் பட்டுவெந்ததைசொல்லவா தேசமெங்கும் திருப்புறமாய் மாண்டதைசொல்லவா. சட்டிப்பானை

இவ்வளவுண்டு சிற்றாண்டி வயிற்றைப் பிதுக்கினுசெத்தாண்டி. நெல்லு

சின்னசிறுக்கியும் சின்னபையனும் சேர்த்துக்கட்டின தாலி சிக்கில்லாமல் அவிழ்ப்பவர்களுக்கு சென்னப்பட்டணம்இனாம். தூக்கணாங்குருவிகூடு

நன்னல் பின்னல்கயிறு ஜாதிவிக்கக்கயிறு என்னைபடாதகயிறு என்னக்கயிறு. பாம்பு

அருணகிரிதருணகிரிமேடை அறுநூற்றைங்காதவழி கற்பூரவாடை இதைவிடுத்தவர்களுக்கு பூவினால்மாலை. தவனமரி

வட்டவட்டசிங்கண்ணுவாசில்லாதசிங்கண்ணைவந்துளழுப்பண்ணு. மூட்டுப்பூச்சி

இராஜாத்தி ராஜவடிபிள்ளை அவன் பூசுவிறகெந்தபொடி பிள்ளை அவள் வயிற்றிலே ஆறுமாதம்பிள்ளை.

தாழம்பூ

அஞ்சிலபிஞ்சில ஓரா ஓரா அறியாத சின்னஞ்சிறு சிறியவர்களே இப்படியிருக்கிறீர்கள் உங்கள் பெரியவர்கள் எப்படியிருப்பார்கள்.

நெற்றிக்கண்டை

பத்துவிரல்பந்தாட ஐந்துவிரல் அமர்ந்திருக்க சூரியனுடன் சூதாட எமனுடன்வாதாட

வரட்டி

காயுங்கோணற்காய் கொள்ளடா மைத்துனா கதையும் விளித்தேன் சொல்லடா மைத்துனா

கொள்ளுக்காய்

பந்து பந்தடா புளியம் பந்தடா தின்று தாக்கடா உமியைப்போக்கடா

துப்பாக்கி

போவான்வருவான் நிம்மப்பன் ஒருகாலில் நிற்பான் நிம்மப்பன்

கதவு

ஆயாள் வீட்டுத்தோட்டத்திலே மஞ்சள்குருவி உஞ்சலாடுது

எலுமிச்சம்பழம்

மொட்டைமாடு உட்கார்ந்திருக்கிறது மூக்காலேயிரை மேய்ந்துவருகிறது

பூசினிக்காய்

ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே பச்சைப்பாம்பு தொங்குது

புடலங்காய்

சட்டமிட்டேபோலிருக்கும் வள்ளிக்கொடிதானும் கொட்டுவோர் கையினின்றுகூத்தாடும் கூட்டாளுமாகாவென்று என்னுமே அம்பலமேசோமாசி ஒருநாள் விட்டத்துளை

வரட்டி

கொக்கைபெண்ணும் பால்வடிய பூமுடிப்பாள் கூலி வருமாதக் காவலிருப்பான் அங்கமெல்லாம் பிளம்பிரக்க வெட்டிப்பார்ப்பாள் அவள்பேரிலெல்லாரு மாசை கொள்வார் கொக்கையிலே கொக்கைநீளபிசைபர் சொல்வான் தெரியிலே நின்றவிலே கூறுவாளே

கம்பங்கதிர்

பட்டை பட்டை நீக்கி பதினாறுபட்டை நீக்கிமுத்துப் பட்டை நீக்கி முன்னேவாராள்மொட்டி

வாழைப்பூ



பந்தங்காலுநாலு பவழப்பல்லுபத்து வெள்ளிந்தடி இரண்டு வெண்சாமரம் ஒன்று

பசு

மந்திரமெல்லாம் ஒரு மூட்டைக்குள்ளே மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே

பருத்திக்கொட்டை

எங்கள்தம்பி பந்தடிப்பான் பயரடிப்பான் நூறுபேரை நூறுங்கடிப்பான்

ஈர்குளி

அடிமரக்களம் இலைபர்வதம் கோலைசிறுக காய்த்துவரு பழம் தித்திப்பு

வாழைமரம்

மூக்குத்திபோல பூப்பூக்கும் அப்படா என்றுகாய் காய்க்கும்

நெருஞ்சிப்பூ. நெருஞ்சிமுள்

ஆயிரம்பேர் தச்சர்கூடி அழகான மண்டபங்கட்டி ஒருவன்கண்பட்டு உடைந்ததாம்மண்டபம்

தேன்கூண்டு

பச்சைப்பச்சைபல்லக்கு பார்ப்பாரபல்லக்கு இரும் பாலடித்தாலும் திரும்பாதபல்லக்கு

பிணம்

ஒருமரம் மரத்துக்கு பன்னிரண்டுகிளை கிளைக்கு முப்பது இலை

வருஷம் மாசம் நாள்

ஆழக்குழிவெட்டி அதிலே ஒருமுட்டையிட்டு அன்றுபார்த்தால் தொண்ணூறுமுட்டை

பனைமரம்

வண்ணான் வெளுக்காத வெள்ளை மழைபெய்யாத தண்ணீர் குயவன்பண்ணுதபாண்டம்

தேங்காய்

சிறாட்டும் பெருகூடும் போல்வர சிறுமுத்து சலெல்லாம் குதித்தவிழ மட்டைதேங்காய் மலர்ந்துவர சம்பலிபோட்டு விழுந்துவர

சோறுவடிதல்

வருகிறதும்போகிறதும் ஒன்றாலே பருத்திடக்கிறது மேதாலே சாவப்போகிறது உன்றாலே செத்துக்கிடக்கிறதும் ஒன்றிலே

மீன்

விடுகதைவிடுகதை முற்றிற்று

184438

## மங்களம்.

சுருட்டி - அடதாளம்

பல்லவி.

மங்களம் ஜயமங்களம் ஈஸ்வரனுக்கு
மங்களம் ஜயமங்களம்.

அநுபல்லவி.

அங்கணுலகெங்குநிறை துங்கமாதேவனுக்கு
மங்கையமாந்திருவருள் வழங்குமகாநுபாவனுக்கும்

சரணங்கள்.

எல்லாச்சுகங்களையு மியற்றவல்லனுக்கு
எவர்களுமேத்துரை மியம்புசொல்லானுக்கு
கல்லார்பிழைபொறுக்குங் கருணைநல்லானுக்கு
காசினிக்கினியவருங் கவினுந்தொல்லானுக்குமங்
மாதவமார்தொழும் வாரிசப்பொருளனுக்கு
வளருங்கேயூரங்கள் வனைந்திண்டோளனுக்கு
சீதளமதிமுகத்துச் சிவமணவாளனுக்கு
தேவாதிதேவனுக்கு திவ்யகுணாளனுக்கு மங்
சொல்லும்பஞ்சகிர்த்தியும் செய்யும்விநோதனுக்கு
திகழுமடியேசங்கட்குந் தெளிவித்தபோதனுக்கு
வல்லையனுக்கிரங்கும் வலமிகுநாதனுக்கு
மாணிக்கந்தனைகருண் மனவாக்கதீதனுக்குமங்

வாழ்த்து.

வேதம்வாழி விமலனும்வாழியிங்
கோதுமான்மாக்கள் வழியுவந்தமெய்க்
காதலன்பர்கள் வாழிகவினுநூல்
ஓதுபெண்களும் வாழியுலகின்.

பாலிகாபூஷணம் - முற்றிற்று.

# விளம்பரம்.

எமது புஸ்தகசாலையில் தேவநாகரம், கிரந்தம், தெலுங்கு, இங்கிலீஷ், முதலிய பலதினுசுகளான பாஷா புஸ்தகங்களும் அடியில்கண்ட சாமான்களும் கிடைக்கும்.

புராணங்கள், இலக்கணங்கள், இலக்கியங்கள், அந்தாதிகள் கலம்பகங்கள், வெண்பாக்கள், பிள்ளைதமிழ்கள், சதகங்கள், மாலைகள், வண்ணங்கள், வேதாந்தங்கள், சித்தாந்தங்கள், ஞானநூல்கள், சித்தர்ஞான நூல்கள், வைஷ்ணவ நூல்கள், யாத்திரைநூல்கள், பூசைக்குரிய நூல்கள், தோத்திரங்கள், பதிகம் பத்துகள், பாடல்கள் கும்மி சிந்துகள் சங்கீதநூல்கள், கீர்த்தனைகள், நாவல்கள், இன்னும் பல புஸ்தகங்கள், சட்டலா-டெ புதுவரு பஞ்சாங்கம், புதியடைரிகள், காலண்டர்கள், ஸ்கூல்புஸ்தகங்கள் டிராயிங் நோட்டுகள். எக்ஸர்ஸயிஸ் ஒஉ ஸ்டேடென்ஸ் டை பேப்பர் தினுசுகள். பென்ஸல் பேனு, பவுண்டன்பேனுக்கள் ஸ்டேஷனரிசாமான்கள். இன்னும் பலவித புஸ்தகங்களும் கிடைக்கும் வேண்டியவர் நேரிலும் தபால்மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்குவிலைசரஸமாக, கொடுக்கக்கூடும் தங்கள் விலாசம் தெரிவித்தால் புஸ்தக விலைஜாப்தா இனாமாய் அனுப்பக்கூடும்.

எமது விலாசம்:—

எஸ். வேணுகோபால் நாயுடு

புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.